## புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் எனபவற்றிற்கு முகாமைத்துவத்தும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாரள அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பினிவரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| மோட்டார் வாகனங்களின் மற்றும் கழிவுப் புகை அகற்றும் உபகரணங்களின் திரட்டிய தேய்வு ஒதுக்கம் முறையே ரூபா.3,332,981 குறைவாகவும் மற்றும் ரூபா.388,332 அதிகமாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான கணக்கீட்டுக் குறைபாடுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதியைச் சரியான முறையில் கணக்குகளுக்கு மாற்றுதல் வேண்டும். |

### 1.5.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்திய சம்பளங்களுக்குரிய நிதி அறிக்கை மற்றும் சம்பளப் பேரேட்டுக்கிடையில் ரூபா.3,961,935 இற்கான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சம்பளத்துடன் செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகள் வேறு கொடுப்பனவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களின் பெறுமதிகள் மற்றும் அதற்குரிய குறிப்புகளின் பெறுமதி ஒன்றுக்கொன்று பொருந்தும் வகையில் கணக்குப் புத்தகங்கள் பேணப்படுதல். |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
| --- | --- | --- |
| அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் கழிவுப் புகை வெளியேற்றல் பரீட்சிப்புப் பொறுப்பு நிதியத்தினை மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் திறைசேரிச் செயலாளரின் 2018 ஒகஸ்ட் 18 ஆம் திகதியிலான 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க, சுற்றறிக்கையின் பிரகாரம் முடிவுறுத்துபவர் ஒருவரை நியமித்து சொத்துக்களிலிருந்து | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சட்ட ரீதியிலான சூழலினுள் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றல். |

பொறுப்புக்களைத் தீர்த்து மீதியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு 2020 மே 15 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், நிதியத்திற்குச் சொந்தமான சேமிப்பு வைப்பின் பெறுமதி மட்டிலுமே ரூபா.1,138 மில்லியன் ஆகும். நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்தின் இரு தரப்பில் திறைசேரி செயலாளர் ஒரு தரப்பினராவார். நிதியத்தினைத் தாபித்த பொறுப்பு உறுதியின் 11 (அ) பந்தியின் பிரகாரம், திறைசேரி செயலாளரினால் வெளியிடப்பட்டதன் அடிப்படையில் இது வரையிலும் குறித்த உடன்படிக்கை ஒப்பந்தத்திலிருந்து ஒரு தரப்பினர் வெளியேறியுள்ளனர். இதனால் நிதியத்தினைப் பேணுவது சட்ட ரீதியான சிக்கலுக்குள்ளாகி உள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவையின் நிதிப்பிரமாணம் 387 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் நிலவும் வங்கி மீதியானது போதுமானதா என்பதைக் கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரால் திருப்திப்படல் வேண்டும். அவ்வாறாயின், நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்படும் காசு மீதியை விஞ்சி காசோலை வரையப்பட்டமையால் 2019 | நடைமுறைக் கணக்கின் மேலதிக நிதி தினந்தோறும் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்படுவதால் செலவு மீதி காணப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திசெம்பர் 31 ஆம் திகதியில் காசுப் புத்தகத்தின் மேலதிகப்பற்று ரூபா.1,231,069 ஆக உள்ளது. | | |
| (ஆ) | PF/423 ஆம் இலக்க மற்றும் 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | 03.2(ஆ) பந்தி | மீளாய்வாண்டில் சேமிப்புக் கணக்கில் மாதாந்தம் ரூபா. 247 மில்லியன் தொடக்கம் ரூபா.1,138 மில்லியனுக்கு இடையிலான வீச்சில் மீதி காணப்பட்ட போதிலும், அந்த மேலதிக மீதியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின் கீழ் மட்டுமே மேலதிக நிதி திரண்ட நிதியத்திற்கு மாற்றப்படும். | மேலதிக நிதியினை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தல். |
| (ii) | 4.3 பந்தி | மீளாய்வாண்டு முடிவுற்று 02 மாதத்திற்குள் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குப் பிரதியிட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | 4.2 (இ) பந்தி | அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வங்கிக் கணக்குகளின் முன்னேற்றம் தொடர்பான காலாண்டு அறிக்கைகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயலாற்றல் பெறுபேறு ரூபா.261,872,618 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா.305,892,107 ஆகும். அதற்கமைய நிதி பெறுபேறுகளில் ரூபா.44,019,489 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டின் வருமானம் ரூபா.32,835,020 இனால் குறைவுற்றமையும், ஆண்டின் பராமரிப்புச் செலவு ரூபா.27,205,881 இனால் அதிகரித்திருந்தமையும் இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 சஞ்சரிக்கும் வளியின் தரத்தினை அளவீடு செய்வதற்கான நடமாடும் அலகு

வளி நிலைமை முகாமைத்துவம் கழிவுப்புகை வெளியேற்றும் பொறுப்பு நிதியத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக சஞ்சரிக்கும் வளி நிலையின் தரம் அதிகரித்துள்ளதா என ஆராய்வதற்கு சஞ்சரிக்கும் வளி நிலைமையினை அளவிடும் உபகரணத்துடனான நடமாடும் வாகனமொன்று 2013 ஜூன் மாதம் ரூபா.30,821,892 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கேற்ப, 05 ஆண்டு கால எல்லைக்குள் நாட்டின் பல்வேறு இடங்களில் காணப்படும் சஞ்சரிக்கும் வளி தரவுகளை நிதியத்திற்குப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு அதிகாரசபையிடம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| (அ) மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை 2018 ஜூலை மாதம் முடிவுற்றிருந்த போதிலும், நடமாடும் வாகனம் கழிவுப் புகை வெளியேற்றும் நிதியத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கு, ஒப்பந்தக் காலத்தினை நீடிப்பதற்கு அல்லது புதிய உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்துவதற்கு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பிற்கான உரிய பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | பொதுவாக பின்பற்றப்படும் சட்ட ரீதியான நிலைமைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) தெரிவு செய்யப்பட்ட 15 இடங்களில் ஒரு இடத்தில் ஒரு வார காலம் இந்த உபகரணத்தின் மூலம் அளவீடு செய்வதற்கும், அது வருடத்திற்கு இரு தடவைகள் மேற்கொள்ளப்பட்டு தரவுகளை நிதியத்திற்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலும் செய்யப்பட்டிருந்த செலவான ரூபா.28,992,552 அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அந்த உபகரணத்தினை ஒப்படைத்த தினத்திலிருந்து இது வரையிலும் 12 வாரங்களுக்கான தரவுகள் | மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் எமது வேண்டுகோளின் அடிப்படையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அரச நிதியினைப் பயன்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டுமே பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2014 ஆம் ஆண்டில் அமைச்சின் பெறுகைகள் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா.47,247,000 இற்கு அதே மாதிரியான உபகரணமொன்று 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையினால் அது 2019 ஏப்பிரல் மாதத்தில் நிதியத்தின் அனுமதியின்றி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் (NBRO) கையளிக்கப்பட்டிருந்தது. உபகரணமானது நிதியத்திற்குச் சொந்தமான சொத்து என்பதனால் அதன் பாவனை, பராமரிப்பு மற்றும் அதன் மூலம் பெறப்படும் தரவுகள் கழிவுப்புகை வெளியேற்றும் நிதியத்திற்குப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றிற்குத் தேசிய கட்டட பரீட்சிப்பு நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்துவதற்கு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலுமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொறுப்பாக நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அரச நிதியினைப் பயன்படுத்தல். |

**3.1.2 ஒளிபுகா மீற்றர் மானி (Opacity Meters) மற்றும் வளிப்பகுப்பாய்வு (Gas Analyzers) உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்**

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதியத்தினுடாக டீசல் மற்றும் பெற்றோல் என்ஜின் பரீட்சிப்பதற்காக முறையே 43 ஒளிபுகா மீற்றர் மானி மற்றும் 32 வளி பகுப்பாய்வுக் கருவிகள் கொள்வனவு செய்தல் தொடர்பாகப் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகம் உள்ளிட்ட மாவட்டக் காரியாலயங்களுக்கு பரீட்சிப்பு உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 03 வருடத்தினுள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கழிவுப்புகை வெளியேற்றல் பரீட்சிப்புகளில் தேர்ச்சி பெறாத வாகனங்களின் எண்ணிக்கை 2,576 ஆனதுடன், அதில் எவ்வளவு எண்ணிக்கையான வாகனங்கள் மீளவும் பரீட்சிக்கப்படுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்ள இயலாதிருந்தது. | அவதானிப்பிற்கு உரிய பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்பட்ட செயல்களின் தகவல்கள் ஆவணப்படுத்தப்பட ல் வேண்டும். |
| (ii) | இந்த வாகனங்களை மீளப் பரீட்சித்தல், உரிய மாவட்ட அலுவலகத்தின் மோட்டார் வாகன பரீட்சிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் அண்மையிலுள்ள கழிவுப் புகை வெளியேற்றல் பரீட்சிக்கும் மத்திய நிலையத்திற்குக் கொண்டு சென்று பரீட்சிப்பதற்கான முறைமையொன்றினைத் தயாரித்தலுக்காக ரூபா.50,691,264 செலவிடப்பட்டு மாவட்டக் காரியாலயத்திற்கு உபகரணங்கள் பெற்றுக் கொடுத்திருத்தல் பயனற்றதொரு கொடுக்கல் வாங்கலென்பது அவதானிக்கப்பட்டது. | கழிவுப் புகை வெளியேற்றல் பரீட்சிக்கும் மத்திய நிலையத்திற்குக் கொண்டு சென்று பரீட்சித்தல் நடைமுறையில் செய்ய முடியாததாகும். | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரச நிதியினைப் பயன்படுத்தல். |
| (ஆ) | 09 டிப்போக்களில் பரீட்சிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ரூபா.21,937,500 செலவில் 10 ஒளிபுகா மீற்றர் மானிகள் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரச நிதியினைப் பயன்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, அந்த உபகரணங்களை வைப்பதற்குத் தேவையான இடங்களை அமைக்காமை, நிர்மாணித்தலைக் கைவிடல் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட 02 இடங்களில் பரீட்சிப்பினை ஆரம்பிக்காதிருத்தல் காரணமாகக் கொள்வனவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் இது வரையிலும் ஒரு வருடத்திற்கும் அதிக காலமாக பாவனைக்குட்படுத்தப்படாது காணப்படுகின்றது. | | |
| (இ) | ஒளிபுகா மீற்றர் மானி மற்றும் வாயுப் பகுப்பாய்வாக்கி என சோடியான அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அவை உற்பத்தித் திறனான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் நிதியம் தெளிவாக அறிந்திருக்கவில்லை. மேலும், குறுகிய காலத் தேவைக்காக சுற்றாடல் அமைச்சிற்கு உபகரணச் சோடியொன்று ரூபா.2,203,968 செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், இதற்காக நிதியத்தின் ஒதுக்கத்தில் காணப்படும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய இயலுமை தொடர்பில் கண்டறியப்படவில்லை. | அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு இந்த உபகரணங்கள் மாதிரிகளாகவே வழங்கப்பட்டுள்ளன. சுற்றாடல் அமைச்சிற்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் மீளவும் பெறப்பட்டுள்ளன. | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரச நிதியினைப் பயன்படுத்தல். |
| (ஈ) | செயலிழந்த 07 வாயுப் பகுப்பாய்வாக்கிகளின் திருத்த வேலைகள் இது வரையிலும் மேற்கொள்ளப்படாது தலைமைக் காரியாலாயத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் 03 வாயுப் பகுப்பாய்வாக்கிகள் காணாமல் போயிருந்தன. அவ்வாறே, 04 ஒளிபுகா மீற்றர் மானிகள் செயலிழந்தும் மற்றும் பாதுகாப்பின்றியும் | உபகரணங்கள் காணாமல் போயிருக்கவில்லை. தற்போதுள்ள உபகரணங்களை சரியான முறையில் களஞ்சியப்படுத்த குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முறையினைச் செயற்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் 01 காணாமலும் போயிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டில் 5,200,407 வாகனங்களுக்குப் புகைச் சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பினும், நிதியத்தினூடாக வீதிப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் 9,317 வாகனங்களுக்கு மட்டுமே அது வழங்கப்பட்ட புகைச் சான்றிதழ்களுடன் ஒப்பிடுகையில் 0.18 சதவீதமான மிகக் குறைந்த பெறுமதியாகும். | அதிகளவில் புகையுடனான வாகனங்கள் மட்டுமே பரீட்சிக்கப்படுகின்றன. | நிறைவேற்றும் செயல்களில் உயர்ந்த செயலாற்றல் இருத்தல் வேண்டும். |

**3.1.3 புகைப் பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக புகைப் பரீட்சித்தல் ஆராய்சிகளுக்காக வெளிவாரி நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | வளி மாசடைதலை மதிப்பிடுவதற்காக ரூபா.21,650,000 செலவிடப்பட்ட 02 ஆராய்ச்சிகளின் உடன்படிக்கைக் காலப் பகுதியானது 2017 ஆம் ஆண்டில் முடிவுற்றிருந்த போதிலும், 2020 மே மாதம் வரையிலும் ஆராய்ச்சி அறிக்கை கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | முடிந்தளவு விரைவில் இறுதி அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | வளி மாசடைதலை மதிப்பிடுவதற்காக ரூபா.1,376,650 செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட மேலும் 02 ஆராய்ச்சிகளின் ஆராய்ச்சி அறிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் நிதியத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகள் இது வரையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | இந்தத் தரவுகள் அது தொடர்பில் அக்கறை கொண்டுள்ள தரப்பினரிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரச நிதியினைப் பயன்படுத்தல். |

### 3.2 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| 02 தனியார் நிறுவனங்களுடன் 2007 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் 4.1 ஆம் நிபந்தனைக்கமைய அந்த நிறுவனம் சேகரிக்கும் வருமானத்தில் 10 சதவீதம் 07 நாட்களுக்குள் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டியதுடன் அந்த 07 நாட்கள் மீதும் ஒவ்வொரு நாளுக்கும் 3 சதவீத தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறிருக்க, நிதியத்தினால் இந்த 07 நாட்களை 07 வேலை நாட்களாகக் கருதியிருந்தமையால் தாமதக் கொடுப்பனவுகளுக்கு உரிய தண்டப்பணமாக 2018 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா.41,137,584 அறவிடப்பட வேண்டி இருந்தது. | வார இறுதி நாட்களைக் கருத்திற்கொள்ளாது வேலை செய்யும் நாட்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனால் அறவிடப்பட வேண்டிய தண்டப் பணம் எதுவுமில்லை. | உரிய தண்டப் பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க முடியாதவிடத்து உடன்படிக்கை நிபந்தனைகளை சட்ட ரீதியான வரையறை செய்யப்படல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| (அ) நிலையான வைப்புகளில் உயர்ந்த வட்டிக்கு முதலீடு செய்யப்பட்ட ரூபா.937,814,749 மீளாய்வு ஆண்டில் மீளப் பெறப்பட்டு சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும், இதனால் நிறைவேற்றப்பட்ட செயல்கள் எதுவுமில்லை. இதனால் அதிக வட்டித் தொகையைப் பெறக் கூடிய இலாபகரமான நிலைமையை நிதியம் இழந்துள்ளது. | கட்டுப்பாட்டுச் சபை கூட்டப்படாமையினால் நிதி முதலீடு செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. | அதிகபட்ச செயலாற்றலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அரச நிதியினைப் பயன்படுத்தல். |
| (ஆ) கழிவுப் புகை வெளியேற்றல் பரீட்சிப்பு மேற்கொள்ளும் நிறுவனத்தினால் அறவிடப்படும் கட்டணத்தைப் பரீட்சிப்பதற்கு காணப்படும் தகவல் ஒழுங்கமைப்பு செயலிழந்துள்ள காரணத்தினால் அந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களின் | குறித்த ஒப்பந்த நிறுவனத்தினால் ICTA நிறுவனத்திற்கு பெற்றுத் தரும் தரவுகள், அந்த நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்கீட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. | நிதியத்தின் நடவடிக்கைகள் சரியான முறையில் பேணுவதற்காக செயற்படுத்தும் முறைமைகளைத் தொடர்ச்சியாகப் பேணப்படுதல் வேண்டும். |

உண்மைத் தன்மையினைப் பரீட்சித்து அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானம் சரியாகக் கிடைத்துள்ளதா என்பதனைப் பரீட்சிப்பதற்கான முறைமையொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசு |
|---|---|---|
| 04 செலவின விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான செலவு என்பவற்றுக்கிடையில் 66 சதவீதம் தொடக்கம் 97 சதவீதம் வரையான வீச்சில் விலகலொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், 15 மூலதனச் செயற்றிட்டங்களின் கீழ் ரூபா.112 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு செயற்றிட்டமும் செயற்படுத்தப்படவில்லை. அதற்கமைய, பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டினை ஆக்கபூர்வமாக முகாமை செய்ய குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமான முறையில் பாதீட்டு தொகைகள் தீர்மானிக்கப்படல். |